■ஷேக் அலாவுதீன்

# அலாவுதீனின் அணையா விளக்கு

**மதரீதியான எதிர்ப்பை மீறி மிகவும் பின்தங்கிய குடிசைப் பகுதி மாணவர்களுக்கு படிப்பு சொல்லித் தருகிறார் இந்த வித்தியாசமான மனிதர்**

அரவிந்தன்

சரஸ்வதி நமஸ்துப்யம்... என்று ஒரு குரல் கணீரென்று ஒலிக்கிறது. அதைத் தொடர்ந்து மாணவர்கள் அந்த ஸ்லோகத்தைத் திருப்பிச் சொல்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? கண்களை மூடியபடி கூப்பிய கைகளுடன் சொல்லித் தருவது ஒரு முஸ்லிம் ஆசிரியர். திருப்பி சொல்வது தலித் சிறுவர்கள். வட சென்னை, வியாசர்பாடியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான சி.கல்யாணபுரம் என்ற பகுதியில் வசிக்கும் சிறுவர்களுக்காக இலவச இரவுப் பள்ளி ஒன்றை நடத்தி வருகிறார் ஷேக் அலாவுதீன் (38). அந்தப் பள்ளியில்தான் இந்தக் காட்சி.

இது ஒரு வித்தியாசமான முஸ்லிம்-தலித் கூட்டணி. அரசியல் அல்லது மத ரீதியான நோக்கம் எதுவுமில்லாமல் உருவான கூட்டணி இது. அலாவுதீன், மத ரீதியான எல்லையைத் தாண்டி, அவர் சொல்வது போல, "இந்த நாட்டின் கலாச்சாரத்தின்" அடிப்படையில் தலித் சிறுவர்களுக்கு சேவை செய்வதோடு, மத ரீதியான எதிர்ப்பையும் மீறி அதை செய்து வருகிறார்.

கைப்பிடி இல்லாத மாடிப்படியைக் கடந்து சென்றால் விசாலமான மொட்டை மாடி. கொட்டகை கிடையாது. அங்குள்ள மூன்று பல்புகள் கஷ்டப்பட்டு வெளிச்சம் தருகின்றன. மொட்டை மாடி முழுவதும் பொடிசுகளும் பெரிய பையன்களுமாக சுமார் 100 பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். பெரிய குங்குமப் பொட்டு, கையில் சாக்பீஸ் சகிதம் அலாவுதீன் பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறார். அவரிடமே படித்து 10ம் வகுப்பு தேறிய இரு மாணவிகள் பொடிசுகளை சமாளிக்க அவருக்கு உதவுகிறார்கள். அந்த வீட்டின் சொந்தக்காரர் சுகுமாரனும் (கூலி வேலை செய்பவர்) பொடிசுகளின் கூச்சலை சமாளிப்பதிலும் அ.ஆ.இ.ஈ சொல்லித் தருவதிலும் உதவி செய்கிறார். ஆசிரியர் உட்கார நாற்காலி கிடையாது. "இந்தப் பள்ளிக் கூடத்துக்கு கொட்டகையும் மாடிப் படிக்கு கைப்பிடியும் போடற வரைக்கும் ஒக்காந்து பாடம் எடுக்கறதில்லன்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்கிறார் அலாவுதீன்.

'தேசிய இரவுப் பள்ளியின்' பொருளாதார நிலைமையைப் பளிச்சென்று புரிய வைக்கின்றன அவரது வார்த்தைகள். வக்கீல் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்த அலாவுதீனுக்கு பெரிய வசதி எதுவும் கிடையாது. துறைமுகம் பகுதியில் பெரிய வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு டியூஷன் எடுத்து தான் தன் வாழ்க்கையை ஓட்டுகிறார். சி.கல்யாணபுரத்து வாசிகளாலும் பெரிதாக எதுவும் தந்துவிட முடியாது. ஆனால் அப்பகுதி மக்களின் ஒத்துழைப்பு, நண்பர்களின் உதவி ஆகியவற்றின் மூலம் "இன்னும் இரண்டு மூன்று மாதத்திற்குள்" கொட்டகையும் மாடிக்கு கைப்பிடியும் போட்டு விட முடியும் என்று நம்பிக்கையோடு சொல்கிறார் அலாவுதீன். இப்படிப்பட்ட சில வசதிக் குறைவுகள் இருந்தாலும் இந்த இரவுப் பள்ளிக் கூடத்தில் கிடைக்கும் கல்வியில் குறைவு எதுவும் இல்லை. "படிக்காதவர்களும் இங்க வந்தா கண்டிப்பா படிப்பாங்க" என்கிறார் பத்தாம் வகுப்பு பாஸ் செய்துவிட்டு டெய்லராக வேலை பார்க்கும் தனலட்சுமி (22). தன் அக்கா குழந்தைகளை தினமும் இந்தப் பள்ளிக்கு அழைத்து வந்து விட்டுவிட்டுப் போகும் அவர் இந்தப் பள்ளியின் பழைய மாணவி.

பிரசிடென்சி கல்லூரியில் பொலிடிகல் சயின்ஸ் பட்டம் படித்த அலாவுதீன் 20 வருடங்களுக்கும் மேலாக இத்தகைய பணியில் ஈடுபட்டு வருகிறார். காசிமேடு, மண்ணடி ஆகிய பகுதிகளில் கொஞ்ச காலத்திற்கு இரவுப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருந்த இவர் சி.கல்யாணபுரத்திற்கு 1979ல் குடியேறிய பிறகு அங்கே வகுப்புகளை ஆரம்பித்தார். இங்குதான் வகுப்புவாதம் இவரது பணிகளில் குறுக்கிட ஆரம்பித்தது.

தன்னிடத்தில் வரும் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள் என்பதால் இந்து பழக்க வழக்கங்களையே






எச்.கே. ராஜசேகர்

பள்ளியிலும் அலாவுதீன் கடைப்பிடித்தார். "எனக்கு இந்தியாவின் பழம் பெருமை வாய்ந்த கலாச்சாரத்தில் நிறைய மதிப்பு உண்டு. விவேகானந்தரின் கருத்துகள்லயும் ரொம்ப ஈடுபாடு உண்டு" என்று சொல்லும் வித்தியாசமான முஸ்லிமான அலாவுதீனுக்கு சரஸ்வதி நமஸ்துப்யம்... என்று மாணவர்களுக்கு சொல்லித் தருவதில் எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால் சில முஸ்லிம்களுக்கு அதில் பிரச்னை இருந்தது. விளைவு? சற்றே குனிந்து முன்னந் தலையின் முடிகளை விலக்கி ஒரு தழும்பைக் காட்டுகிறார் அலாவுதீன். 1990ல் அவர் மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு அவரால் அங்கு பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

ஆனால் மனிதர் விடுவதாக இல்லை.

ஏழு ஆண்டுகள் கழித்து போன வருடம் மறுபடியும் ஆரம்பித்து விட்டார். இப்போது உள்ளூர்வாசிகள் சிலர் பக்க பலமாக இருப்பதாலும் ஊரில் சிறிய வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளுக்காக நடத்தப்படும் இலவச பயிற்சி வகுப்புகள் எதுவும் கிடைக்காது என்பதாலும் மறுபடியும் வகுப்பு சக்கை போடு போட ஆரம்பித்திருக்கிறது. எல்.கே.ஜி. முதல் 10ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் 110 பேர் இந்த இரவுப் பள்ளிக்கு தினமும் வருகிறார்கள்.

அலாவுதீன் பள்ளியை நடத்தும் விதமே அலாதியானது. இரவுப் பள்ளி என்றாலும் பல சமயம் மாலை 5 மணிக்கே வகுப்பு துவங்கி விடும். 6 மணிக்கு பிரார்த்தனை. அலாவுதீன் பாடம் நடத்துவதோடு நிற்பதில்லை, சுத்தம், சுகாதாரம், நல்ல பழக்க வழக்கங்கள், விளையாட்டு என்று பல அம்சங்கள் அவர் பள்ளியில் உண்டு. குழந்தைகளைக் கொண்டு விடும் பெரியவர்களிடம் பிள்ளைகள் வீட்டில் படிக்கிறார்களா, ஊர் சுற்றுகிறார்களா, எத்தனை நேரம் டி.வி. பார்க்கிறார்கள், எத்தனை மணிக்குத் தூங்குகிறார்கள் என்றெல்லாம் விசாரிக்கிறார். "ஒழுக்கம் இல்லாத படிப்பு பிரயோஜனமில்லை" என்கிறார். இவரது இந்த அணுகுமுறைக்கு பகுதி மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது. "ரெண்டே மாசத்துல பசங்க நெறைய மாறிகிறாங்க. இப்பல்லாம் காத்தாடி வுடக் கூட அவ்வளவா போறதுல்ல. ஊட்ல ஒக்காந்து படிக்கறாங்க" என்று சந்தோஷப்பட்டுக் கொள்கிறார் தனது இரண்டு குழந்தைகளை இந்த இரவுப் பள்ளிக்கு அனுப்பும் ஒரு அம்மா.

இவரது சேவை மாணவர்களின் மாணவப் பருவத்தோடு முடிந்து விடுவதில்லை என்பதுதான் விசேஷம். பத்தாம் வகுப்பு முடித்ததும் என்ன செய்வது என்று யோசனை கேட்க மாணவர்கள் இவரிடம் வருகிறார்கள். படித்து விட்டு வீட்டில் இருக்கும் பெண்களைத் அவர்களது பகுதியிலுள்ள "தம்பி தங்கைகளுக்கு" பாடம் சொல்லித்தர வைக்கிறார். இதன் மூலம் சேவை செய்யும் திருப்தியுடன் டியூஷன் எடுப்பதற்கான பயிற்சியும் கிடைக்கிறது என்கிறார் அங்கு பாடம் சொல்லித் தரும் ஒரு முன்னாள் மாணவி.

**"இந்த நாட்டின் கலாச்சாரத்தின்" அடிப்படையில் தலித் சிறுவர்களுக்கு சேவை செய்கிறார் இந்த வித்தியாசமான முஸ்லிம்.**



பிரெசிடென்சி கல்லூரியில் படிக்கும் போது அங்கு நூலகராக இருந்த பிரேமா பாண்டுரங்கன் (இப்போது கல்வியாளர், சமயச் சொற்பொழிவாளர்) மூலமாகத்தான் தனக்கு இந்திய கலாச்சாரம், ஒழுக்கத்தோடு கூடிய கல்வி போன்ற விஷயங்களில் பிடிப்பு ஏற்பட்டது என்று நினைவு கூர்கிறார் அலாவுதீன். அது தவிர, செங்குருதி என்கிற பிரேம்சந்தின் கதையைப் படித்ததும் விவேகானந்தரின் கருத்துக்களும் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின என்கிறார். இப்படிப்பட்ட நாட்டில் ஏன் இத்தனை குறைகள் ஏற்பட்டன, இவற்றை எப்படிப் போக்குவது என்பது போன்ற சிந்தனைகள் இவருக்குள் எழுந்தன. அடுத்த தலைமுறையினரை பண்பும் கல்வியறிவும் பெற்றவர்களாக உருவாக்குவதே இதற்குத் தீர்வு என்ற எண்ணம் பிறந்தது. அதன் விளைவுதான் இந்தக் கல்விச் சேவை.

முஸ்லிமாகப் பிறந்த இவர், இந்தியக் கலாச்சாரத்தின் மீது தனக்கு இருக்கும் பிடிப்பினால் தன் சமூகத்திடமிருந்து தனிமைப்பட்டுப் போவது பற்றிக் கவலைப்படவில்லை. சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்து வரும் வகுப்பு மோதல்களையும் மதம் சார்ந்த கண்ணோட்டத்தில் இவரால் பார்க்க முடியவில்லை. "தவறாக வழிகாட்டப்பட்ட சிலரால்தான்" இதெல்லாம் நடக்கின்றன என்கிறார் அலாவுதீன். "நமது மக்கள் இந்துக்களாகவோ முஸ்லிம்களாகவோ இருக்கறதுல தப்பில்ல. ஆனா அவங்க எந்தக் காரணம் கொண்டும் ஐ.எஸ்.ஐ. ஏஜண்டுகளா ஆகிடக் கூடாது" என்று அலாவுதீன் அழுத்தமாகச் சொல்கிறார்.

தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை குடிசைப் பகுதி மக்களுக்கான கல்விச் சேவையிலேயே செலவிடும் அலாவுதீன் திருமணம் ஆகாதவர் என்பதில் ஆச்சரியமில்லை. "இந்தப் பணியில் ஒத்துழைக்கக் கூடிய பெண்ணாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று இந்த 38 வயதில் அவரால் புன்னகையுடன் சொல்ல முடிகிறது. திருமணமாகாமலேயே போய்விட்டாலும் கவலையில்லை என்று சொல்லுமளவுக்கு அவருக்கு இந்தப் பணியில் ஈடுபாடு இருக்கிறது. "நூறு இளைஞர்களைக் கொடுங்கள். இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என்று விவேகானந்தர் சொன்னார். என் பங்குக்கு அப்படி ஒரு இளைஞனையாவது உருவாக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்" என்று இவர் சொல்லிக் கொண்டிருக்கும்போது, "சார், பத்மினியோட ஜாமெண்ட்ரி பாக்ஸ் காணோமா(ம்) சார்" என்று ஒரு குரல் கேட்கிறது. லட்சியக் கனவின் பிடியிலிருந்து விடுபட்டு யதார்த்த உலகுக்கு வருகிறார் அலாவுதீன். "தோ வந்துட்டேன்" என்று விரைகிறார். அடுத்த தலைமுறையை உருவாக்கும் வேலையில் ஓய்வெடுக்க நேரமேது? ■